(17)

OFFICE OF THE
SUPERINTENDING ENGINEER/PLANNING
TAMIL NADU ELECTRICITY BOARD,
800, ANNA SALAI, 6th FLOOR
CHENNAI 600 002.

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர்கள்/ ஓய்வூதியர்கள் / தொழிற்சங்கங்களுக்கு இடையேயான முத்தரப்பு ஒப்பந்தம்.

தமிழ்நாடு அரசு சார்பில் எரிசக்தித்துறை அரசு முதன்மைச் செயலாளர் (இங்கு மாநில அரசின் பிரதிநிதியாக கருதப்படுவார்) மற்றும் ஒப்பந்தகுழுவினரின் முதல் பகுதி நபருக்கிடையே....... நாளன்று முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுகிறது.

மற்றும்

மின்சாரம் (விநியோகம்) சட்டம், 1948 பிரிவு ஐந்தின்கீழ் (1948 LIV–யின் மத்திய சட்டம்) மற்றும் மின்சார சட்டம், 2003ன் கீழ் தருதிப்பூர்வமாக இயங்கிவரும் (2003XXXVI–இன் மத்திய சட்டம்) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் (இங்கு வாரியம் என்ற பெயர் அதனுடைய அர்த்தம் மற்றும் சூழ்நிலை முரணாக விளங்காது பொருட்டு பின்னவர் மற்றும் அவர்களுடைய உரிமை மாற்றங்களும் அடங்கும்) சார்பில் இரண்டாம் பகுதி ஒப்பந்த குழுவினராக அதன் தலைவர் உள்ளார்.

www.tnebes.org

மற்றும்

மூன்றாம் பகுதி ஒப்பந்த குழுவினராக மின்வாரிய ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களின் பிரதிநிதியாக உள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் கழகங்களின் (இங்கு தொழிற்சங்கம் என்று அழைக்கப்படுவர்) பொது செயலாளர்/தலைவர் அல்லது மற்ற அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள், கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

| வ. எண் | தொழிற்சங்கத்தின் பெயர் | அங்கிகாரம் பெற்ற பிரதிநிதி | பதிவு எண் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

ஆகையால்

1) தமிழக அரசு தனது 8.10.2008 நாளிட்ட அரசு ஆணை (பல்வகை) எண்.114 எரிசக்தித் துறை, அவற்றில் தநாமிவா நிறுவனம் மற்றும் அதனுடைய இரு துணைமை நிறுவனமான தமிழ்நாடு மின் தொடர் அமைப்புக் கழகம் மற்றும்

(141)

OFFICE OF THE SUPERINTENDING ENGINEER/PLANNING TAMIL NADU ELECTRICITY BOARD, 800, ANNA SALAI, 6th FLOOR CHENNAI - 600 002.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மேற்கூறிய நிறுவனங்கள் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் என்ற நிபந்தனையோடு வாரிய மறுசீரமைப்புக்கு ஒப்புதல் வழங்கியது.

2) மின்வாரியம் மறு சீரமைக்கபடுவதன் காரணமாக மின்வாரிய ஊழியர்கள், தனது வேலை நிலை பாதிக்கப்படும் அல்லது ஆட்கள் குறைக்கப்படுகிறார்கள் அல்லது அவர்களுடைய பணி தனியார்மயமாக்கப்படும் என்று அச்சம் கொள்ளலாம்.

3) ஆனால், இதுபோன்ற செயல்கள் வாரியம் சீரமைக்கப்படுவதால் ஏற்படாது என்று தமிழக அரசு தெளிவாக கூறியுள்ளது.

4) வாரியத்தை சீரமைக்கும் மற்றும் மாற்றியமைக்கும் திட்டம் சுமுகமாக செயல்முறைப்படுத்த மற்றும் அதன் பணியாளர்களை புது நிறுவனங்களில் பணி ~~ஏற்றுக்கொள்வ~~து அமர்த்துவது தொடர்பாக மேலே பிரிவு 2–இல் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு தொழிற்சங்கங்கள் எழுப்பும் அச்சங்களை அகற்றும் பொருட்டு அவர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக மேற்கூறிய சீரமைப்புத் திட்டத்தை நிறைவேற்ற உறுதியளிக்கின்றார்கள்.

5) ஆகையால், வாரியத்தை சீரமைக்கும் பணியைக் கருத்தில் கொண்டு நபர்களுக்கிடையே (Parties) ஏற்படுத்தப்பட்ட இசைவான ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு;

(1) இந்த முத்தரப்பு ஒப்பந்தம் பொறுத்தவரையில்;

(அ) வாரியம் என்றால் தமிழ்நாடு மின்சார~~வரியம்~~. வாரியம்

(ஆ) உடைமை நிறுவனம் என்றால் தநாமிவா நிறுவனம்.

(இ) புது (Successor entities) என்றால் தநாமிவா நிறுவனம் அல்லது தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் அல்லது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அல்லது எப்படி இருப்பினும்;

(ஈ) துணை நிறுவனம் என்றால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் / தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் ஆகும்.

(14)

OFFICE OF THE ... TAMIL NADU ... BOARD, 800, ANNA SALAI ... FLOOR, CHENNAI - 600 002.

2) மின்வாரியத்தை, தநாமிவா நிறுவனம் (உடைமை நிறுவனம்) மற்றும் அதன் இரண்டு அல்லது பல துணை நிறுவனங்களாக தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் போன்ற தனி நிறுவனங்களாக மாற்றம் செய்யும் சீரமைப்பு நிகழ்வுகளின் பொழுது மின்வாரிய ஊழியர்கள் குறைக்கப்படமாட்டார்கள் மற்றும் சீரமைப்பு செய்யப்படாமல் இருக்கும்பொழுது உள்ள அதே அனுகூலமான சூழ்நிலைகளே சீரமைப்புக்கு பின்னும் நிகழும் என்று தமிழக அரசும் வாரியமும் உறுதியளிக்கின்றன. அதைப்போல், சீரமைப்பின் மாற்றத்தின்பொழுது எந்த மின் வாரிய ஊழியர்களாவது மிகையாக/உபரியாக காணப்பட்டால் அவர்கள் மறுபடியும் வேலையில் சேர்க்கப்படுவார்கள்.

(3) தற்பொழுதுள்ள மின்வாரிய ஊழியர்கள் புதிய நிறுவனங்களுக்கு மாற்றம் செய்யப்படும்பொழுது இப்பொழுதுள்ள விதிமுறைகளும் வரையறைகளும் எந்த விதத்திலும் குறைவாகவோ/ பாதகமாகவோ இராது. மின்துறையின் வளர்ச்சிக்கும் அதன் பொருளாதார மற்றும் திறன்களுக்கும் பணியாளர்களின் பகுதி மிக முக்கியம் என்பதனை கருத்தில் கொண்டு தொழிலாளர் நலவாழ்வு மிகவும் நன்மைக்குரிய செயல் என்ற அடிப்படையில் வாரிய விதி முறைகளும் வரையறைகளையும் பகுத்தறிய முயற்சிகள் எடுக்கப்படும்.

www.tnebes.org

(4) மின் வாரியம் நிரந்தரமாக புது நிறுவனங்களாக மாற்றப்பட்டு புது ஒழுங்கு முறைகள், விதிமுறைகள், சான்றிதழ் நிலையாணைகள் ஆகியவை அவற்றால் கொண்டுவரும்வரை இந்த இடை நிலைகாலங்களில் தற்பொழுதுள்ள பதவி உயர்வுகள், பணியில் அமர்த்தல், உள்முகதேர்வு, பணிமாற்றம், விடுப்பு, அனைத்து படிகள் போன்றவற்றின் விதிமுறைகள் மற்றும் பணி ஒழுங்குமுறைகள் மாற்றப்படமாட்டாது என்று உறுதியளிக்கப்படுகிறது. இதற்கிடையே, ஏதேனும் மாறுதல் செய்ய வேண்டுமென்றால் அவைகள் அங்கீகரிக்கப்பட தொழிச்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி முறையான செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படும். எனினும், பணியமர்த்தல், பதவி உயர்வு ஆகியவைகள் புது நிறுவனத்தின் பதவி மற்றும் காலியிடங்களை கொண்டு உள்ளடங்கும்.

(5) மின் வாரியம் சீரமைப்பு ஆன பின்பும் தொழிற்சங்கங்களால் கொண்டுவரப்பெற்ற தற்போதைய ஊதிய ஒப்பந்தம் மற்றும் வேலை பளு ஒப்பந்தம் புதிய ஒப்பந்தம் ஏற்படும்

(145)

OFFICE OF THE
SUPERINTENDING ENGINEER/PLANNING,
TAMIL NADU ELECTRICITY BOARD,
800. ANNA SALAI. 6th FLOOR.
CHENNAI - 600 002

வரையில் இவைகள் முழுவலிமையுடனும் செயல்பாட்டுடனும் தகுதியுடையதாகும். ஊதிய மாற்றம் பொறுத்தவரையில், தற்பொழுதுள்ள இருதரப்பு பேச்சு வார்த்தைகள், தொழிற்சங்கங்களால் அந்தந்த புது நிறுவனங்களிடமும் தொடர்ந்து நடத்தப்படும். தமிழ்நாடு மின்வாரிய புது நிறுவனங்கள் எதிர்கால ஊதிய ஒப்பந்தங்களை தொழிற்சங்கங்களுடன் ஈடுபடும். இருப்பினும் இவைகள் அனைத்தும் உடைமை நிறுவனத்தின் ஒப்பதலின்படி துணை நிறுவனங்களிடம் பேச்சுவார்த்தை நடைபெறும்.

(6) இந்த ஒப்பந்தம் கையொப்பமிடும் நாளிலிருந்து தற்பொழுதுள்ள அனைத்து ஓய்வூதியர்கள்/ குடும்ப ஓய்வூதியர்கள் / மற்ற தகுதியுடைய நபர்கள் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், ஓய்வு/ இறப்பு சலுகைகளாகிய பணிக்கொடை, ஈட்டியவிடுப்பு காசாக்குதல் மற்றும் தற்பொழுதுள்ள பொது வருங்கால வைப்புநிதி பஞ்சப்படி மற்றும் அனைத்து இறுதி நிலை சலுகைகளும் வழங்கப்படும் என்று முதல் மற்றும் இரண்டாம் நிலை பகுதி ஒப்பந்தகாரர்களால் உறுதியளிக்கப்படுகின்றது.

(7) தற்பொழுதைய மின்வாரிய ஊழியர்களைப்பொறுத்தவரையில் பொது வருங்கால வைப்புநிதி/பங்குத்தொகை பெறு வருங்கால வைப்புநிதி ஆகியவகைள் அனைத்தின் மீதும், ஊழியர்களின் நலனை பாதுகாக்கும் வகையில், தகுந்த ஏற்பாடுகள் எடுக்கப்படும். தகுந்த ஏற்பாடுகள் முடிவுக்குகொண்டு வரும்வரை எங்கு வேலை செய்கிறார்களோ அங்கே என்ற சூழ்நிலையில் உள்ள தற்பொழுதைய மின்வாரிய ஊழியர்களின் அனைத்து செலவினங்களையும் அந்தந்த வாரிய கால்வழியின (Successor) நிறுவனங்களிலிருந்து செலவுகளுக்குரிய தொகை வழங்கப்படும்.

(8) தமிழக அரசால் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் கருணை அடிப்படையில் வேலை, மருத்துவ செலவு ஈடு, தற்பொழுதைய செல்லத்தக்க நாள் முடியும் வரையுள்ள மருத்துவ காப்பீடு மற்றும் தகுந்த திட்டம்/ காப்பீடு, கல்வி முன்பணம், உடல் நல நிதி, வீடுகட்ட முன்பணம், ஊர்தி முன்பணம், திருமணம், பண்டிகை முன்பணம் மற்றும் ~~தற்பொ~~ தற்போதுள்ள கடன் மற்றும் முன்பணம் தொடர்புடைய அனைத்து பணியாளர்களின் நலவாழ்வு நடவடிக்கைகள் அனைத்தும் தொடரும்.

www.tnebes.org

(147)

OFFICE OF THE
SUPERINTENDING ENGINEER/PLANNING
TAMIL NADU ELECTRICITY BOARD,
800, ANNA SALAI, 6th FLOOR
CHENNAI - 600 002

(9) சட்டப்படியாக உள்ள வருங்காலவைப்பு நிதி, பணிக்கொடை மற்றும் பணியாளர்கள் தொடர்புடைய மற்ற மூப்போய்வு சலுகைகள் மீதான அனைத்து வாரிய உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகள் அனைத்தும் புது நிறுவனங்களுக்கு மாற்றப்படும்.

(10) தமிழக அரசால் சீர்திருத்தம்செய்தும் திரும்பப்பெறவும் உள்ள தற்பொழுதுள்ள ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கான நலதிட்டங்கள் அனைத்தும் தொடரும். வாரியம் சீரமைப்பு ஆவதற்கு முன்பு மின்வாரிய பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களின் ஓய்வு ஊதியம், குடும்ப ஓய்வூதியம் மற்ற பணிமூப்பு சலுகைகளாகிய வருங்கால வைப்பு நிதி, மூப்போய்வு, பணிக்கொடை மற்றும் விடுப்பை காசாக்கிக்கொள்வது போன்ற செலவினங்களின் பொறுப்புகள் அனைத்தையும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்குரியது, மேலும், வாரியம் சீரமைக்கப்படும் நாளிலிருந்து பணிபுரியும் தற்போதைய வாரிய ஊழியர்களின் மேற்கூறிய செலவினபொருப்புகள் அனைத்தும் அந்தந்த ஊழியர்களின் நிறுவனங்களுக்கு மாற்றியமைக்கப்படும். அது மட்டுமல்லாமல், தமிழக அரசால் அவ்வப்பொழுது ஓய்வூதியர்களுக்கு அறிவிக்கப்படும் சலுகைகள் அனைத்தும் எந்த மாற்றமும் செய்யாமல் அப்படியே முந்தைய மின்வாரியம் செயல்படுத்தியது போல கால்வழியின (Successor) நிறுவனங்களால் செயல்படுத்தப்படும்.

www.tnebes.org

(11) மின்வாரியம் மற்றும் புது நிறுவனத்தின்கீழ் பணிசெய்து வரும் தற்போதைய பணியாளர்களின் பணிக்காலங்கள் (Period of service) பதவி உயர்வு, உள்முகதேர்வு, ஊதிய நிர்ணயம், தெரிவு நிலைக்கு செல்லுதல் மற்றும் பணிமூப்பு/இறுதிநிலை சலுகைகள் போன்ற அனைத்து பயன்களின் காரணங்களுக்காக பணியாளர்களின் பணிபுரியும் காலங்களை தொடர்காலங்களாக கருதப்படும்.

(12) வாரியம் சீரமைக்கப்படும் நாளிலிருந்து, பணியாளர்களின் பணிபுரியும் காலங்களின் சலுகைகள் அனைத்தும் பாதுகாக்கப்படும்.

(13) தநாமிவா நிறுவனம், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் உருவாகும் போது அல்லது மேலும் அதன் தொடர்பான ஆணைகள் வெளிவரும்வரை, தற்பொழுதுள்ள அனைத்து மின்வாரிய பணியாளர்களையும்

(145)
OFFICE OF THE
SUPERINTENDING ENGINEER/PLANNING
TAMIL NADU ELECTRICITY BOARD,
800, ANNA SALAI. 6th FLOOR.
CHENNAI - 600 002.

தற்சமயம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் தக்கவைத்துக்கொள்வார்கள். மேலும், பணியாளர்கள் எங்கு வேலைசெய்கிறார்களோ அங்கு என்ற அடிப்படையில் பணித்தொடர்ச்சி செய்வதுடன் அவர்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் பணியாளர்கள் என்று கருதப்படுவதுடன், அவர்கள் பின்பு மற்ற கால்வழியின (Successor) நிறுவனங்களுக்கு வேற்றுப்பணிக்கனுப்பப்பட்டுள்ளாதாக நடத்தப்படுவார்கள். இந்த இடைநிலை காலம் (Transition period) மாற்றுதல் திட்டத்தில் தமிழக அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதிகாரம்பெற்ற அரசிதழில் அறிவிக்கப்படும். இந்த இடைநிலை காலத்தில், அதாவது, பணியாளர்களின் தெரிவை சரிசெய்யும்வரை மற்றும் அவர்களை புது நிறுவனங்களில் பணியமர்த்தும்வரை பணி நிலை மேலாண்மை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு சென்றடையும். இந்த இடைநிலை காலங்களில் தற்பொழுதுள்ள ஒவ்வொரு பதவி வகைக்குமுள்ள மூப்புநிலை படிவம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் பராமரிக்கப்படும். தநாமிவா நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் ஆகிய இரண்டும் உடன் ஆலோசனை செய்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் எங்கே தேவையுள்ளதோ அங்கே பணியாளர்களை பணியிடம் செய்யப்படுகின்றபொழுது மற்ற உள்நிறுவனங்கள் அவற்றினை மறுக்காமல் ஏற்கவேண்டும். புது நிறுவனங்களில் பணியாளர்களை நிரப்பும்பொழுது கண்டிப்பான மூப்புநிலை நெறிகளையே பின்பற்ற வேண்டும். மின் வாரியம் தனது பணியாளர்களுக்கு வழங்கிய வரையரைகள் போலவே புது நிறுவனங்களும் அந்த பணிகால வரையரைளை எந்தவித பாதகமின்றி செயல்படுத்தும். இடைநிலை காலங்களில் ஓய்வுபெறும் வாரிய ஊழியர்களின் ஓய்வு / இறுதிநிலை சலுகைகளாகிய பொது வருங்கால வைப்பு நிதி/பங்குத் தொகை பெறு வருங்கால வைப்பு நிதி மற்றும் ஓய்வுதிய செலவினங்கள் அனைத்தும் தற்பொழுது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் மேற்கொள்ளப்படும், அதன் பின்பு புது நிறுவனங்கள் மேற்கொள்ளும்.

(14) இந்த இடைநிலை காலங்களில், அதாவது, வேற்றுபணிக்கனுப்பலில் இருந்து நிரந்தரமாக பணியில் அமர்த்தும்வரையில், தற்பொழுதுள்ள வாரிய பணியாளர்கள் தங்களின் தெரிந்தெடுப்பு முறையை பயன்படுத்தலாம் மற்றுமல்லாமல் தெரிந்தெடுப்பில் ஏதேனும் குறை இருக்குமானால் அக்குறையினை தீர்க்கும்பொருட்டு தமிழ்நாடு மின்சார

OFFICE OF THE
SUPERINTENDING ENGINEER/PLANNING
TAMIL NADU ELECTRICITY BOARD
800, ANNA SALAI, 6th FLOOR
CHENNAI - 600 002

வாரிய நிறுவனம் குறைகளை கையாளும் குழுவை உருவாக்கும். வகை I மற்றும் II நிலை அலுவலர்களுக்கு தனிக்குழுவும் வகை III மற்றும் IV – காம் நிலை பணியாளர்களுக்கு தனிக்குழுவும் அமைக்கப்படும். தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்திலிருந்து மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திலிருந்தும் சார்பாளர்கள் அந்தக் குழுக்களில் இடம் பெறுவார்கள். குறைகளை கையாளும் குழு ஏதாகினும் ஒரு வகை/பிரிவினை சேர்ந்த பணியாளர்/பணியாளர்கள் தனது தெரிந்தெடுப்பின் மூலமாக பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்தால் அந்த வகை/பிரிவினை சேர்ந்த பணியாளர்கள் நிர்வாகத்தின் உடனடித்தேவையினை அடிப்படையாகக் கொண்டு மற்றும் ஒரு முறை தனது தெரிவை தெரிவிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

(15) வாரிய பணியாளர்கள் புது நிறுவனங்களுக்கு பணிமாற்றம் ~~அடையும்~~ செய்யும்பொழுது அவர்கள் வாரியத்தில் வாங்கப்பட்ட கடன், முன்பணங்கள் மற்றும் செலுத்தவேண்டிய அனைத்து தொகைகளை கால்வழியின (Successor) நிறுவனத்திடம் அந்த கடமைகள் நிறைவேற்று முடிக்கப்படும் என்று பணியாளர்கள் ஒப்பந்தம் செய்துள்ளார்கள் என்று கருதப்படும்.

(16) மின் வாரியம் சீரமைப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து செயல்படுத்தப்படும் அனைத்து நிலுவையிலுள்ள ஒழுங்கு நடவடிக்கைகள் [illegible] தற்பொழுதுள்ள ஒழுங்குமுறைகள், விதிமுறைகள், சான்றளிக்கப்பட்ட நிலை ஆணை மற்றும் அனைத்து அறிவுரைகள்/கட்டளைகள் அனைத்தும் [illegible] நிர்வாகத்தால் மேற்கொள்ளப்படும். மின்வாரியத்தினால் தற்பொழுதுள்ள விதிமுறைகள்/ஒழுங்குமுறைகள் / சான்றளிக்கப்பட்ட நிலை ஆணை கொண்டு முடிவுபெற்ற அனைத்து ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளும் விதிமுறைகள்/ ஒழுங்குமுறைகள் அனுமதித்தால் ஒழிய வேறு எந்த காரணத்தாலும் அதனை மறுபடி எடுக்கக்கூடாது.

(17) தற்பொழுதுள்ள அனைத்து [illegible] தொடரும், மேலும் அவ்வப்பொழுது காலத்துக்கு ஏற்ப [illegible] அப்பொழுது அவைகளை அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கம் மற்றும் [illegible]களுக்கிடையே சுமுகமான பேச்சுவார்த்தைகளின் மூலம் இறுதி நிலை [illegible].

(153)

OFFICE OF THE
SUPERINTENDING ENGINEER/...
TAMIL NADU ELECTRICITY BOARD
800, ANNA SALAI, 6th FLOOR
CHENNAI - 600 002.

(18) இதுநாள்வரை மின்வாரியத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட இட ஒதுக்கீடு தொடர்பான விதிமுறைகள் புது நிறுவனங்களிலும் தொடரப்படும், மேலும் தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்படும் ஒதுக்கீடு தொடர்புடைய விதிமுறை மாற்றங்கள் /திருத்தங்கள் அனைத்தும் புது நிறுவனங்களால் தொடரப்பட வேண்டும்.

(19) ஒருவேளை புதிதாக நிறுவப்பட்ட நிறுவனம் /நிறுவனங்கள் மேற்கூறிய ஒப்பந்தத்தை செயல்படுத்த தவறினால், அதனை செயல்முறைப்படுத்தும் பொறுப்பை தமிழக அரசு ஏற்கும்.

(20) புது நிறுவனங்கள் புது வகையான விதிமுறைகள் ஒழுங்குமுறைகள், சான்றளிக்கப்பட்ட நிலையாணை போன்றவை இடைக்காலம் முடிவு பெற்ற தேதியை அடுத்த தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும். அதுவரை இந்த ஒப்பந்த தேதியில் நடைமுறையில் இருந்த மேற்கூறிய அனைத்தும் நடைமுறையில் இருக்கும்.

www.tnebes.org

(21) இந்த முத்தரப்பு ஒப்பந்தத்தினால் ஏற்படும் ஏதாவது சொற்பூசல்/வேறுபாடுகளை ஒப்பந்த நபர்களால் இணக்கமான முறையில் முதல் தருணத்திலேயே வேறுபாடுகள் 60 நாட்களுக்குள் தீர்வுசெய்யப்பட முடியவில்லை என்றால் அதனை தமிழக அரசிடம் ஆலோசனை பெற்று தநாமிவா நிறுவனத்தால் நியமனம் செய்யப்படும் நடுநிலைத் தீர்ப்பாளியிடம் ஒப்படைக்கப்படும். [illegible] நிலையில் சென்னையில் உள்ள நீதிமன்றங்கள் சட்ட ஆளுமை கொள்ளும்.

(22) இந்த முத்தரப்பு ஒப்பந்தம் தமிழக அரசு, வாரியம் /புது நிறுவனங்கள், வாரிய தொழிற்சங்கங்கள், வாரிய ஓய்வூதியர்கள் மற்றும் அனைத்து பணியாளர்களையும் பிணைக்கும். காலத்துக்கேற்ப முத்தரப்பு ஒப்பந்த தொடர்பாக எழக்கூடிய ஆணைகள் /அறிவுறைகள்/வழிமுறைகள் ஆகியவற்றினை வழங்க முதல் ஒப்பந்த நபரான தமிழக அரசுக்கு அதிகாரம் வழங்கப்படும். இந்த நிலையை முத்தரப்பு ஒப்பந்தத்தின் பிரிவு 5–இன் உட்பிரிவு (21)இல் உள்ளபடி மற்ற ஒப்பந்த நபர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(152)

OFFICE OF THE
SUPERINTENDING ENGINEER/PLANNING
TAMIL NADU ELECTRICITY BOARD.
800. ANNA SALAI. 6th FLOOR.
CHENNAI - 600 002.

(23) ஒப்பந்த நபர்களுக்கிடையே ஏற்படுத்தப்படும்/செயல்படுத்தப்படும் இந்த முத்தரப்பு ஒப்பந்தம் தமிழக அரசின் அரசிதழில் அறிவிக்கப்படும்.

சான்றாளர்களின்படி ஒப்பந்த நபர்கள் இந்த முத்தரப்பு ஒப்பந்தத்தை குறிப்பிட்டுள்ள நாள் மற்றும் தேதியில் கையெழுத்திட்டு உள்ளார்கள்.

தமிழக அரசின் பிரதிநிதி

வாரியத்தின் பிரதிநிதி

அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் /கழகங்களின் பிரதிநிதிகள்

www.tnebes.org

சான்றாளர்கள்

1)

2)